|| ஸ்ரீ : ||

# ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம்
# ஸ்ரீ காமாக்ஷி அம்மன் திருக்கோயில்

காஞ்சீபுரம்.

ஸ்ரீகாமாக்ஷி அம்மன் கோயிலில் ஜீவ ஸமாதி கொண்டு வீற்றிருந்து அருள் பாலித்து வரும் ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதருக்குப் பிரதி வருஷமும் ஜனனோத்ஸவமாக ஸ்ரீ சங்கர ஜயந்தி உற்சவம் நடைபெற்று வருகின்றது. வரும் விரோதி வருடம் சித்திரை மாதம் 16 ஆம் தேதி (29-04-2009) துவங்கி 10 தினங்களுக்கு ஸ்ரீ சங்கர ஜயந்தி உற்சவம் கீழ்க்கண்ட நிரலின் வண்ணம் நடைபெறும். ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் இவ்வைபவங்களில் பங்கு கொள்ளலாம்.

29-04-2009 புதன் முதல் 08-05-2009 வெள்ளி முடிய தினசரி காலை ஸ்ரீ ஆதிசங்கரருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். இரவு 7.30 மணிக்கு ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர் அம்மன் ஸந்நிதி வலம் வந்து உள் ஸந்நிதியில் தர்சனம்.

தினசரி ஸ்ரீ ஸௌந்தர்யலஹரி 10 ஸ்லோகங்கள் பாடப்படும். ஒவ்வொரு ஸ்லோகமும் தனித்தனியாகப் பாடப்பட்டு தனித்தனி ஆராதனை நடைபெறும். பிறகு வெளிப் பிரகாரத்தில் திருவுலா நடைபெறும்.

உற்சவ இறுதி நாளன்று (08-05-2009) ஸ்ரீ ஆதி சங்கரர், ஸ்ரீ காமாக்ஷி அம்மனுடன் கூட நான்கு ராஜ வீதிகளிலும் திருவீதி உலா வந்து அருள் புரிவார்கள்.

ஸ்ரீ. காஞ்சீ செல் : 9380872792, 9940857595